மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. பெ. பொன்னுசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. பெ. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கின்றேன்:

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970-71 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான (வருவாய்-வரவினங்கள்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த முந்தைய அறிக்கைகள், நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் எட்டாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் உள்துறை குறித்து மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய குழுவின் எழுபத்தைந்தாவது அறிக்கை.

1986-87 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) கல்வித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஆறாவது அறிக்கை.

1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (எண். 2/1989) (சிவில்) கல்வித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஏழாவது அறிக்கை.

1986-87 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வருவாய்-வரவினங்கள்) உள்துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி எட்டாவது அறிக்கை.

1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வருவாய்-வரவினங்கள்) உள்துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஒன்பதாவது அறிக்கை.

1986-87 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வருவாய்-வரவினங்கள்) தொழில் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எண்பதாவது அறிக்கை.

1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (எண். 5/1989) (சிவில்) உள் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தி ஒன்றாவது அறிக்கை.

1986-87 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) உள்துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தி இரண்டாவது அறிக்கை.

முற்பகல் 11-50

7. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) அடகுபிடிப்போர் (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகுபிடிப்போர் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகுபிடிப்போர் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.